# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32/2023

### அ.சா.11 (LW 2 )

| பெயர் | திரு நாகேந்திரன் | தொழில் | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| த/க பெயர் | முத்துக்காளை | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 23.02.2026 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2 ஆஜர்.

**மொழிபெயர்ப்பாளர் திரு. அரவிந்தன் முன்னிலையில் பின்வருமாறு சாட்சிகளின் விசாரணை நடத்தப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மூனான்டிபட்டியில் குடியிருந்து மில்லில் வேலை செய்கிறேன்.

புகார்தார் சாந்தசீலா எனது அத்தை மகள் ஆவார். அ.சா.3. பெரியசாமி என் சித்தப்பா ஆவார். வழக்கில் இறந்து போன ராம்குமார் என் தங்கையின் கணவர் ஆவார். கடந்த 24.08.2022 அன்று இரவு 07.00 லிலிருந்து 08.00 மணிக்கு இறந்து போன ராம்குமார் 2 ஹிந்திகாரர்களிடம் சண்டை போட்டுக் கொண்டிருப்பதாக பெரியசாமி என்னிடம் சொன்னார். அதன் பின்னிட்டு நான் புகார்தாரரிடம் போனில் மேற்படி விவரத்தை சொன்னேன். நான் சென்றால் நானும் சண்டை போடுவேன் என சொல்லி புகார்தாரர் பெரியசாமியை சென்று சண்டையை சமாதானம் செய்ய போகச் சொல்லுமாறு சொன்னார். புகார்தாரரிடம் மறுநாள் காலை ராம்குமார் வந்துவிட்டாரா என கேட்டேன். இன்னும் வரவில்லை என சொன்னார். அதன்பின்னிட்டு நான் , எனது சித்தப்பா மற்றும் புகார்தாரரும் வடமதுரை, தாமரைப்பாடி, பின்னிட்டு முத்தனங்கோட்டையில் அவர் வழக்கமாக சென்று சரக்கடிக்க போகும் இடங்களில் தேடிப் பார்த்தோம். எங்கும் கிடைக்காததால் வந்து விட்டோம். மறுநாள் 26.08.2022 அன்று புகார்தாரர் எனக்கு சுமார் 09.00 மணிக்கு ராம் குமார் இறந்து விட்டதாக என்னை அழைத்தார். காவேரி மில் அருகே உள்ள இடத்தில் போய் பார்த்தோம்.அப்போது தலையில் பலத்த காயம் இருந்தது. இடது பக்க உடம்பில் காயங்களும், தலையில் பலத்த காயம் இருந்தது. பின்னிட்டு புகார்தாரர் நிலையம் சென்று புகார் அளித்தார். நான் சம்பவ இடத்திலேயே இருந்தேன். பின்னிட்டு காவல்நிலையத்திலிருந்து 12.00 மணி வாக்கில் போலிசார்

சம்பவ இடம் வந்தார்கள். காவல்துறை விசாரிக்கும் போது 24.08.2022 அன்று நடந்த சண்டை குறித்த மேற்கண்ட விவரத்தை சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

__1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:__

பெரியசாமி போனில் எனக்கு தகவல் சொல்லித்தான் எனக்கு சண்டை நடந்ததாக சொல்லப்படும் விவரம் தெரியும். எனக்கு நேரடியாக சண்டை போட்ட விவரம் தெரியாது என்றால் சரிதான். பெரியசாமி 24.08.2022 அன்று எந்த இடத்தில் யார், யாருடன் ராம்குமார் சண்டை போட்டதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. மூனான்டி பேருந்து நிலையத்தில் வைத்து சண்டை போட்டதாக சொன்னார். போலிசார் விசாரிக்கும் போது பெரியசாமி போனில் தகவல் சொல்லிதான் எனக்கு தெரியும் என சொன்னேன். பெரியசாமி எந்த எண்ணிலிருந்து போன் செய்தார் என்ற விவரம் சொல்ல இயலுமா என்றால் நம்பர் ஞாபகமாக தெரியாது. போனை பார்த்தால் தெரியும். புகார்தாரரின் நம்பர் தெரியுமா என்றால் ஞாபகமாக தெரியாது. போனை பார்த்தால் தெரியும். என்னுடைய போன் அழைப்புகள் குறித்து போலிசார் என்னை விசாரித்து குறித்துக் கொண்டார்கள் என்றால் குறித்துக் கொண்டார்கள். என்றைக்கு என்னிடம் போலிசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் 24.08.2022 அன்று சண்டை தொடர்பாக வடமதுரை போலிசார் சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். யார் விசாரித்தார்கள் என்று குறிப்பாக தெரியாது. 3 போலிசார் வந்தார்கள். காவல்நிலையத்தில் வைத்தும் என்னை விசாரித்தார்களா என்றால் 27.08.2022 அன்றும் விசாரித்தார்கள். நான் சொல்லச் சொல்ல போலிசார் வாக்குமூலத்தை எழுதினார்கள். அதை வாசித்துக் காட்டினார்கள். யார் என்று குறிப்பாக தெரியாது. 24.08.2022 அன்று பெரியசாமி எனக்கு போன் செய்யும் போது நான் வீட்டிலிருந்தேன். நான் சென்று இறந்து போன ராம்குமாரையும், சண்டையிட்டவர்களையும் விலக்கி விடவில்லை. ராம்குமார் 25.08.2022 லிருந்து காணவில்லை என்று வடமதுரை காவல்நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை, தேடித்தான் பார்த்தோம்.பொதுவாக ஒரு நபரை காணவில்லை என்றால் புகார் அளிக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். இறந்து போன ராம்குமார் அதிக மதுப்பழக்கம் உள்ளவர். அவர் யார், யாருடன் சென்று மது அருந்துவார் மற்றும் எந்தெந்த இடங்களுக்கு செல்வார் போன்ற விவரங்கள் தெரியுமா நிறைய பேர்களுடன் மது குடிப்பார் என்பதால் யாருடன் குடித்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மூனான்டிபட்டியில் யார்,யாருடன் மது குடிப்பார் என்ற விவரம் தெரியுமா என்றால் பசங்களுடன் சேர்ந்து மதுகுடிப்பது வழக்கம். மூனான்டிபட்டியில் மதுபானக்கடையோ, பாரோ இல்லை . மது குடிப்பவர்கள் மது வாங்கி வந்து ஊருக்குள் மறைவான இடத்தில் மது அருந்துவார்கள். ராம்குமாரும் வீட்டில் மது குடிப்பது வழக்கம் இல்லை, வெளியில் பசங்களுடன் சேர்ந்து மறைவான இடத்தில் மது குடிப்பார். மூனான்டிபட்டியில் எந்த பசங்களுடன் சேர்ந்து மதுகுடிப்பார் என்ற விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. முத்தனங்கோட்டையில் ராம்குமார் காணாமல் போன பின்பு எந்தெந்த உறவினரிடம் கேட்டு தெரிந்து கொண்டோமா என்றால் யாரிடமும் குறிப்பாக விசாரிக்கவில்லை, அவர் மது குடிக்கும் இடங்களுக்கு போய் பார்த்தோம். பிரேதம் கிடந்ததாக சொல்லப்படும் இடம் வெள்ளபொம்மனம்பட்டி ஊருக்கு செல்லும் வழியில்

இருந்தது. சாலையிலிருந்து பிரேதமானது சுமார் 30 மீட்டர் தூரத்தில் இருந்தது. மூனான்டிபட்டியிலிருந்து பிரேதம் 2 1/2 கிமீ தாண்டி , 2 பேருந்து நிறுத்தம் தாண்டிதான் இருந்தது. முத்தனங்கோட்டை கிராம பஸ்ஸ்டாப்பானது வடமதுரை செல்லும் வழியில்தான் உள்ளது. முத்தனங்கோட்டையிலிருந்து பிரேதம் 2 ஸ்டாப் தள்ளி சுமார் 2 1/2 கிமீ தாண்டி உள்ளது. பஸ்ஸ்டாப்பிலிருந்து முத்தனங்கோட்டை கிராமம் 1 கிமீ தொலைவில் உள்ளது. நான் தகவல் கேள்விப்பட்டு சம்பவ இடம் போனது பொதுமக்கள் கூட்டமாக இருந்தார்கள். போலிசார் இல்லை. நான் போன போதே புகார்தாரர் அங்கே இருந்தார். 12.00 மணிக்குத்தான் போலிசார் வந்தார்கள். நான் அன்றையதினம் காவல்நிலையம் செல்லவில்லை. உண்மையில் எனக்கு பெரியசாமி எனக்கு எந்த தகவலும் 24.08.2022 அன்று சொல்லவில்லை என்றாலும் நான் அது குறித்து புகார்தாரரிடம் எந்த தகவலும் சொல்லவில்லை என்றாலும் , நான் சொன்னமாதிரி, சொன்ன தேதியில் சம்பவ இடத்திற்கு பார்க்கவில்லை என்றாலும் போலிசார் கேட்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.23 19:04:09 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.